**தமிழ்நாடு அரசு**
**சுருக்கம்**

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் - 2000-2001ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டம் - மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ரூ.5.00 இலட்சம் செலவில் அறைகலன்கள் வாங்க அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை**

அரசாணை (நிலை) எண். 43 நாள்:25.5.2000
படிக்கப்பட்டது:

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் கடிதம் எண்.பி2 /305/2000 நாள் 17.4.2000

ஆணை:

மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் அமைந்துள்ள கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுள், 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு 2000-2001ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ், ரூ.5.00 இலட்சம் செலவில் அறைகலன்கள் வாங்க, மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

2. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்றுக்கொண்டு, மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் அமைந்துள்ள இவ்வரசாணையின் இணைப்பில் விவரித்துள்ள 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு 2000-2001ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ், ரூ.5.00 இலட்சம் செலவில், அறைகலன்கள் வாங்குவதற்கு அரசு உத்திரவிடுகிறது.

3. மேலே பத்தி 2ல் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினத்தை கீழ்வரும் கணக்குத் தலைப்பில் செலவிடலாம்:

"2225 ஆதி திராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 80 பொது 101 சீர்மரபினர் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் யிஞி சீர்மரபினர் பள்ளிகள் 24 பொருட்களும் வழங்கலும்" (த.தொ.கு.எண்.2225 80 101 யிஞி 24

4. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 36032/சந/2000 நாள் 10.5.2000-ன்படி இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந.முருகன்
அரசு செயலாளர்

பெறுநர்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை 600 005.
மாவட்ட ஆட்சியர், மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள்.
தனித்துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) மதுரை.

சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
மாநிலக் கணக்காயர், சென்னை-18
மாநிலக் கணக்காயர், சென்னை-35
மாநிலக் கணக்காயர், சென்னை-6
(பெயருடன் கூடிய உறையில்)
மாவட்டக் கருவூல அதிகாரி, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள்.

நகல்:

பிற்பட்டோர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**இணைப்பு**

2000-2001 பகுதி-2 திட்டத்தின் கீழ் அறைகலன்கள் வழங்கப்பட வேண்டிய பள்ளிகளின் விபரங்கள்

| வ.எண் | பள்ளியின் பெயர் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, கரடிக்கல் | மதுரை |
| 2. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, சங்கம்பட்டி | மதுரை |
| 3. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, டி. சாணார்பட்டி | மதுரை |
| 4. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, மேலக்கால் | மதுரை |
| 5. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, தேவதானப்பட்டி | தேனி |
| 6. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, ஜெயமங்கலம் | தேனி |
| 7. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, வாழையாத்துப்பட்டி | தேனி |
| 8. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, உ. அம்மாப்பட்டி | தேனி |
| 9. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, பொன்னிமாந்துரை | திண்டுக்கல் |
| 10. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, சொக்கலிங்கபுரம் | திண்டுக்கல் |

/உண்மை நகல்/